பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
28 04 2025 **MONDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு நிலவரம் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹானுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

2. மத்தியப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த 12 பேரின் குடும்பத்தினருக்கு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

3. நாட்டின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6 புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கவர்னர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

4. ரஃபேல் விமான கொள்முதல் தொடர்பாக இந்தியா – பிரான்ஸ் இடையே இன்று ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

5. மான்செஸ்டர் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krittwik Roy- Sayali Wani** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

**<<<<<<>>>>>>>**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌஹானுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஆலோசனையின் போது, பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

மேலும், எல்லைப்பகுதியில் ஊடுருவலை தடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>>**

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து, இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் திரு. **David Lammy–**யுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து திரு. ஜெய்சங்கர் விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த தாக்குதலுக்குப் பிந்தைய நிலவரம் குறித்தும் இங்கிலாந்து அமைச்சருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாத்தை இந்தியா ஒரு போதும் சகித்துக் கொள்ளாது என்று எடுத்துரைத்ததாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் மக்களிடம் கடும் கோபத்தை ஏற்படுத்தியிருப்பதாக கூறினார்.

இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவது உறுதி என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியிருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப்போர் கடும் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

அடுத்த 25 ஆண்டுகளில் 30 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்க மக்கள் அனைவரும் ஆரோக்கியமானவர்களாக இருப்பது அவசியம் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உலக சுகாதார மாநாட்டில் பேசிய அவர், மக்களின் ஆரோக்கியம் மற்றும் முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

குறைந்த செலவில் வீட்டு வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சமையல் எரிவாயு இணைப்பு, நவீன கழிவறை வசதிகளுடன், கல்வித் தரத்தையும் உயர்த்தியதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார சேவையில் இந்தியா உலக நாடுகளுக்கு உதவி வருவதை சுட்டிக்காட்டிய திரு. பியூஷ் கோயல், இத்துறையில் இந்தியா உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்வதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

மத்தியப்பிரதேச மாநிலத்தில் நேற்று நேரிட்ட சாலை விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.

இமமாநிலத்தின் **Mandsaur** மாவட்டத்திற்கு உட்பட்ட நாராயன்கர் பகுதியில் அதிவேகமாக சென்று கொண்டிருந்த வேன், மோட்டார் சைக்கிள் மீது மோதி சாலையோரம் உள்ள கிணற்றுக்குள் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6 புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கவர்னர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற அமெரிக்க - இந்திய பொருளாதார அமைப்பின் கூட்டத்தில் பேசிய அவர், உலகளாவிய நிதிச் சந்தையில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை காரணமாக, வளர்ச்சியடைந்த நாடுகளே பாதிப்புக்கு உள்ளானபோதிலும், இந்தியாவின் வளர்ச்சி சீராக உள்ளதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சி தொடர்ந்து நிலையாகவும், வலிமையானதாகவும் உள்ளதால், முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா – அமெரிக்க இடையேயான ஒத்துழைப்புகள் இந்தியாவிற்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகிற்கும் பயனளிக்கும் என்றும் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

ரஃபேல் விமான கொள்முதல் தொடர்பாக இந்தியா – பிரான்ஸ் இடையே இன்று ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

இந்திய கடற்படைக்கு மெரைன் ரக போர் விமானங்களை வாங்குவதற்கான இந்த ஒப்பந்தம் 63 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த புதிய விமானங்கள், கடற்படையின் திறனை மேம்படுத்துவதுடன், தற்போது பயன்பாட்டில் உள்ள மிக் 29 ரக விமானங்களுக்கு மாற்றாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

2025ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

நாட்டின் உயரிய விருதாக கருதப்படும் பத்ம விருதுகள், 139 பேருக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.

இதன்படி, ஓய்வு பெற்ற நீதிபதி ஜே.எஸ். கெஹர் உள்ளிட்ட 7 பேருக்கு பத்மவிபூஷன் விருதும், தொழிலதிபர் திரு. நல்லி குப்புசாமி, நடிகர் அஜித்குமார், நடிகை ஷோபனா உள்ளிட்ட 19 பேருக்கு பத்மபூஷன் விருதும், குருவாயூர் திரு. துரை, புரிசை திரு. கண்ணப்ப சம்மந்தன், பறை இசை கலைஞர் திரு. வேலு ஆசான், கிரிக்கெட் வீரர் அஸிவின் உள்ளிட்ட 113 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி கோவிலில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் முழுமையாக செய்து கொடுக்கப்படும் என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு கூறியுள்ளார்.

ராமேஸ்வரத்தில் செய்தியார்களிடம் பேசிய அவர், இக்கோவிலுக்கான பெருந்திட்ட வரைவின்படி 37 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இவற்றில், 14 பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், 6 பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோதண்டராமர் கோவிலில் 103 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டிருப்பதாகவும், இந்தப் பணிகள் அனைத்தும் முடிவடையும் போது, ராமேஸ்வரம் வரும் பக்தர்களுக்கான வசதிகள் முழுமை பெறும் என்றும் திரு. சேகர்பாபு நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>>**

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்த இரண்டு பேர் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**Pakherpora** பகுதியைச் சேர்ந்த இவர்கள், தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளித்தல், போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதுடன், உள்ளூர் இளைஞர்களை தீவிரவாத அமைப்புகளில் சேர தூண்டுவது போன்ற தேசவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>>**

கனடா நாட்டில் பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

அந்நாட்டு பிரதமராக இருந்த திரு. **Justin Trudeau** கடந்த ஜனவரி மாதம் பதவி விலகியதை அடுத்து, இடைக்கால பிரதமராக திரு. **Mark Carney** பொறுப்பு வகித்து வருகிறார்.

இந்நிலையில் புதிய அரசை தேர்ந்தெடுக்க அந்நாட்டில் இன்று நடைபெறும் பொதுத்தேர்தலில் சுமார் 73 லட்சம் பேர் வாக்களிக்கவுள்ளனர்.

<<<<<<>>>>>>

மான்செஸ்டரில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krittwik Roy- Sayali Wani** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 5-11, 8-11, 13-11, 10-12 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Dina Meshref -** சிங்கப்பூரின் **Zeng Jian** இணையிடம் தோல்வியடைந்தது.

<<<<<<>>>>>>

புதுதில்லியில் நடைபெற்ற ஆசிய யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியா 83 தங்கப்பதக்கங்களை வென்றது.

21 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்ற இப்போட்டியில், 83 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்று இந்தியா பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

மூன்று தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலம் வென்று ஜப்பான் இரண்டாம் இடத்தையும், ஒரு தங்கம், 11 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கம் வென்று மங்கோலியா 3ஆம் இடத்தையும் பிடித்தன.

<<<<<<>>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்ற பெங்களூரு அணி பந்து வீச தீர்மானித்ததை அடுத்து, முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 162 ரன் எடுத்தது.

163 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 18 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

ராஜஸ்தானில் இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>>>**

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்கள் 7 பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டனின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **Jannet, Simranjeet Kaur, Harsika, Anshika, Kushi Chand, Ahanna Sharma** ஆகியோரும், ஆடவர் பிரிவில் **Devansh-**ம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

**<<<<<<>>>>>>>**

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Paritosh Pawar** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 6-7, 6-1, 11-9 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் **Daniel–**ஐ வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் **Prasad Ingale-**ம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>>**